[*2017 ஜூலை 13*

7, 8 கிலோ மீட்டர் தூரம் கடந்து கால்நடை மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய நிலையிருக்கிறது என்றும், அந்தப் பகுதியில் நிறைய கால்நடைகள் இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று இருந்தால், கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று புதிதாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலக முத்திரையில் தமிழ்மொழி இடம்பெற வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தினுடைய அலுவலக முத்திரை இந்தி எழுத்துக்களில் மட்டுமே இருக்கிறது என்று இன்று காலையிலே எல்லா பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் செய்தியாக வந்திருக்கிறது. செம்மொழி நிறுவனத்திலேயே இதுபோன்று தமிழுக்கு முக்கியத்துவம் இல்லை என்பது அதிர்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே தமிழுக்கு இப்படி ஒரு நிலை வந்திருப்பது வேதனையான ஒன்று. செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். எனவே, அவரை நான் கேட்க விரும்புவது என்னவென்றால், அலுவலக முத்திரை இந்தியில் இருப்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர்*

2017 ஜூலை 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

அறிவாரா? தமிழ் முத்திரை இடம்பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதேபோல, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் பொறுங்கள். நீங்கள் இரண்டு, மூன்று விஷயங்களை தகவல் கோரல் என்ற முறையில் கேட்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். முதலில், இந்த விஷயத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதிலைச் சொல்லச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் முழுமையும் மத்திய அரசின் ஆளுமைக்குட்பட்டது. நிருவாகம் அனைத்தும் மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் வருகிறது. கடந்த காங்கிரஸ் அரசு காலங்களில் குடியரசுத் தலைவர் மாளிகையில் செம்மொழிக்கான விருதுகள் வழங்கப்படும்போது, இந்தியிலும், ஆங்கிலத்திலும் விருதாளர்களை அழைத்து விருதுகளைத் தந்தார்கள். இச்செய்தியை அறிந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரிய அறிவுரைகளை வழங்கினார். அதன்பின்னர் அம்மா அவர்களுடைய மேலான வழிகாட்டுதலின்படி, செம்மொழி கல்விக் குழுவில் கலந்துகொண்ட தமிழ்நாடு அரசு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் அவர்கள், தமிழறிஞர்களுக்கு விருது வழங்கும்போது, "அவர்கள் பெயரையும், அவரது தகுதியையும் ஏன் தமிழில் வாசிக்கக்கூடாது?" என்று வலியுறுத்தினார். அதன்பேரில், அடுத்த ஆண்டு முதல், தமிழிலும் விருதாளர்களுக்கான தகுதிகள் வாசிக்கப்பட்டு, விருதுகள் வழங்கப்பட்டன என்பதை இம்மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஊடகங்களில் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலக முத்திரை ஆங்கிலத்திலும், இந்தியிலும் இடம்பெற்றிருப்பது குறித்து செய்திகள் வெளிவந்துள்ளன. ஏற்கெனவே செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் கல்விக் குழுவில், நிதிக் குழுவில், ஆளுகைக் குழுவில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆகியோர்மூலம் செம்மொழி மத்திய நிறுவனத்தின் நிருவாக அலுவல்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தமிழில் மட்டுமே அமைதல் வேண்டும் என்று அவ்வப்போது வலியுறுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மைய அரசின் தங்க நாற்கரச் சாலைகளில், தமிழ்நாட்டின் மைல்கற்களில் இந்தியிலும், ஆங்கிலத்திலும் எழுதியபோது, மாண்புமிகு அம்மா அவர்கள், ‘தமிழ் என்பது தமிழ்நாட்டின் உணர்ச்சி. இதில் யாரும் விளையாடக்கூடாது’ என்று எச்சரிக்கை விடுத்தார்கள். அவரது வழியில் தமிழ்நாட்டை வளர்த்து, தமிழ்நாட்டைக் காக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இதை கொண்டுசென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த முத்திரையிலே தமிழ் எழுத்துக்கள் இல்லையென்று சொன்னார்கள். அந்த முத்திரையில் தமிழ் எழுத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். தரமணியில் இருக்கின்ற பதிவாளரிடத்திலே நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதன் அடிப்படையில், அந்த அலுவலகத்திலுள்ள முத்திரையை அடித்து, எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது தமிழிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த முத்திரையில் தமிழ் எழுத்துக்கள் இருக்கின்றன என்று அவை முன்னவர் அவர்கள் சொல்கிறார்கள்.